**In the Court of the District Munsif, Eraniel**

Original Suit No. 70/2022

Date: 10.07.2025

(PW1)-முத்துசாமி

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் 1 ம் பிரதிவாதி யார் என்றால் எனது தம்பி ஆவார். 2 ம் பிரதிவாதி யார் என்றால் எனது அப்பாவின் தம்பி மகன் ஆவார். நான் ஆவண எண் 2000/1120 M E) ஆவணத்தின் பி பட்டிகை சொத்தாக எனது அப்பாவிற்கு கிடைத்ததன் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, என் அம்மா எனக்கு எழுதி கொடுத்த உயில் பத்திரத்தின் படி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் பிராதில் கூறியுள்ள சங்கதிகள் தவறு என்றால் சரியல்ல. ஆவண எண் 2000/1120 (M E) ஆவணத்தின் நகலை இந்த நீசிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

2. மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்தால் தான் எனது அப்பாவிற்கு பாகப்பிரிவினைப்படி எவ்வளவு சொத்து கிடைத்துள்ளது என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான், எனது அப்பா உயிருடன் இருக்கும் காலத்தில் வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து ஏதேனும் ஆவணம் எழுதி வைத்துள்ளாரா என்றால் உயில் எழுதி வைத்தார், ஆனால் பதிவு செய்யவில்லை, அதன் பின் என் அம்மா உயில் எழுதி கொடுத்தார். எனது அப்பா எழுதி வைத்த உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது அப்பா எழுதிய உயிலை தான் என் அம்மா எழுதி பதிவு செய்து கொடுத்தார். வழக்கு பட்டிகை சொத்தின் உரிமை அனைத்தையும் எனது அப்பா, உயில் படி எனது அம்மாவிற்கு கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

3.நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும், எனது அப்பா எந்த உயிலும் எழுதி வைக்கவில்லையென்றாலும் சரியல்ல. எனது அப்பா எனது அம்மாவிற்கு எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் வாசாஆ. 1 ஆவணம் எழுதுவதற்கு எனது

அம்மாவிற்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் இந்து சமயத்தை சர்ந்தவர் என்றால் சரிதான். இந்து வாரிசுரிமை சட்டப்படி கணவனின் சொத்து மனைவிக்கு ஒரு பங்கு தான் வரும் என்றாலும், மொத்த சொத்தை பொறுத்து என் பெயருக்கு எழுதி வைத்த உயில் ஆவணம் செல்லாது என்றாலும் சரியல்ல.

4. இரணியல் கோட்டை, புத்தன் வீட்டு மாதவன் பிள்ளை மகன் பிரபாகரன் நாயர் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. சரல்விளை ஊரில் நாகமணி நாடார் அவர்களின் மகன் செல்லப்பன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்ட மேற்படி இரண்டு நபர்களும் வழக்கிற்காக உற்பத்தி செய்த உயில் ஆவணத்தில் கையொப்பமிட்டவர்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் உயில் ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல.

5. வாசாஆ. 2 ஆவணம் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு சில நாட்கள் முன்பு எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது அம்மா 1995 ம் வருடம் இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது அம்மா இறந்து 5 வருடங்கள் பின்னர் நான் பட்டாவில் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரிதான், எனது அம்மாவின் இறப்பு சான்றிதழ் பெற்று பெயர் மாற்றம் செய்ய கால தாமதமாகியது. உயில் ஆவணம் புனையப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல, உண்மையான ஆவணம். வாசாஆ. 4 ஆவணத்தில் என் தந்தையின் காலத்திற்கு பிறகு பாகப்பிரிவினைப்படி எனக்கு வந்தது என்று கூறியுள்ளேன் ஆனால் மேற்படி பாகபத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல.

6. 2 ம் பிரதிவாதி குடும்பத்துடன் கோயம்புத்தூரில் வசித்து வருகிறார் என்றால் எங்கிருக்கிறர்கள் என்று தெரியாது, கோயம்புத்துரில் இருப்பதாக கேள்விப்பட்டேன். 2 ம் பிரதிவாதி என் மீது OS.231/2011 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் விளம்புகை பரிகாரம் மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம்

கோரப்பட்டது என்றால் சரியல்லமேர்படி உழக்கில் 30.08.2013 ல் தீர்ப்பாணை வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் வாதியாக பத்மநாபபுரம் சம்பு நீதிமன்றத்தில் OS.217/2011 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

7. மேற்படி வழக்கு 2 ம் பிரதிவாதிக்கு சாதகமாகவும் எனக்கெதிராகவும் தீர்ப்பானது என்றால் சரியல்ல, நான் மேற்படி வழக்கை திரும்ப பெற்று விட்டேன், மேற்படி வழக்கு சொத்திற்கும் இந்த வழக்கு சொச்சிற்கும் சம்பந்தமில்லை. நான் மேற்படி வழக்கு சொத்திற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்பந்தமில்லை என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி பட்டிகை சொத்தில் அவருடைய பங்கில் நான்கு புறமும் கம்பி வேலி அமைத்து அனுபவித்துள்ளார் என்றால் சரியல்ல, என்னுடைய பங்கில் தான் வேலி போட்டுள்ளார்.

8.பொன்னையா நாடார் என்பவருக்கு 2 ½ சென்ட் சொத்து கிடைத்ததை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். எனது அம்மாவிற்கு பட்டிகை சொத்து கிடைத்ததை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான், எனது அம்மாவின் பெயருக்கு சொத்து பெயர் மாற்றம் செய்யவில்லை. நான் பிராதில் கூறியுள்ளவாறு 2 ½ சென்ட் சொத்தில் வேலி அமைத்திருப்பதை காட்டுவதற்கு நீதிமன்ற ஆணையரை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுக்கவில்லை. நீதிமன்ற ஆணையர் மூலம் இடத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்வதன் மூலம் மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இருக்கிறதா என்பது பற்றி நீதிமன்றத்திற்கு தெரிய வரும் என்றால் சரிதான்.

9.நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா இடத்தை அளவீடு செய்ய வேண்டி வருவாய் துறையில் மனு செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. நானும் 1 ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து 2 ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டி இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால்சரியல்ல, எனது பிராதில் பத்தி 4 ல் 15.09.2022 தேதி பிரதிவாதிகள் எல்லை கற்களை மார்பினர்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ. 4 ஆவணத்தில் 10.10.2022 அன்று காலை 9 மணியளவில் பிரதிவாதிகள் எல்லைகற்களை மாற்றினார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

10. வாசாஆ, 4 ஆவணத்தில் 15.09.2022 அன்று சம்பவம் நடந்ததாக எங்கும் குறிப்பிடவில்லையென்றால் சரிதான். 10.10.2022 அன்று நடந்த சம்பவத்திற்கு 12.10.2022 அன்று புகார் கொடுத்துள்ளேன் என்பது வாசாஆ, 4 மூலம் தெரிய வருகிறது என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவிற்கு ரசீது எதும் கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. நான் இந்த வழக்கை 17.10.2022 அன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், நான் இந்த வழக்கிற்கு மூலக்காரணம் வேண்டும் என்ற காரணத்திணால் தான் போலியாக புகார் ஆவணமான வாசாஆ, 4 ஐ தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. எனது முதல் விசாரணையில் வடப்புறம் ஒரு வழி உள்ளது, குறிப்பிட்டுள்ள வழி யாருடையது என்றால் பக்கத்து இடத்தின் உரிமையாளரான தங்கப்பன் என்பவருடையது. பிரதிவாதியின் சொத்து என்னுடைய சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். 10.10.2022 அன்று ஒரு சர்வேயரை வைத்து அளந்து காட்டக்கூடிய எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். நான் கூறியவாறு எந்த அளவீடும் செய்யாததால் என்னால் மேற்கூறியவாறு ஆவணங்களை தாக்கல் செய்ய முடியவில்லையென்றால் சரியல்ல. எனது தந்தை எழுதி கொடுத்த உயில் ஆவணமும், தாய் எழுதி கொடுத்த உயில் ஆவணமும் சட்டப்படி செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

12. பட்டிகை சொத்தை பொறுத்து நீதிமன்றத்தால் விளம்புகை பரிகாரம் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் அதே சொத்தை பொறுத்து அதே பிரதிவாதிகள் மீது 11 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு Resjudicata வால் தடைசெய்யப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. 2ம் பிரதிவாதி நீதிமன்ற தீர்ப்பின் மூலம் சட்டப்படி அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் நானும் 1 ம் பிரதிவாதியும் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு பொய்யான சங்கதிகளை கூறி 2 ம் பிரதிவாதி மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13. 10.10.2022 தேதியில் 2 ம் பிரதிவாதி கோயம்புத்தூரில் இருந்தார் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி மட்டும் தான் சம்பவ இடத்தில் இருந்தார். நாள் இந்த வழக்கிற்காக உண்மைகளை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.